**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், மேலூர்**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17–ம் நாள் திங்கள்கிழமை**

**STC No.243/2026**

**CNR No.TNMD16-001658-2026**

....

மருந்துகள் ஆய்வாளர்,
மேலூர் பிரிவு
உதவி இயக்குநர் அலுவலகம்,
மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை
மதுரை மண்டலம்,
எண்.98/5, பரம்பு மலைகரடு,
மேலகுயில்குடி, மதுரை. ...புகார்தாரர்

//எதிர்//

A.M.முகைதீன் அப்துல்காதர் ஜெய்லானி
உரிமையாளர்
M/s.Bavaji Medicals,
கதவு எண்.189–B, திருவாதவூர் ரோடு,
செக்கடி, மேலூர்,
மதுரை மாவட்டம். ...எதிரி

இம்மனுவானது புகார்தாரர் தரப்பில் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(C) r/w விதிகள் 65(3)(1), 65(2), 65(4)(3)(i), 65(9)(a) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)–ன் படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் மருந்துகள் ஆய்வாளர், மேலூர் பிரிவு, உதவி இயக்குநர் அலுவலகம், மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை மதுரை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.17 15:15:16 +0530

மண்டலம், அவர்கள் முன்னிலையாகியும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கதிரேசன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1) இவ்வழக்கானது அரசுக்காக மருந்துகள் ஆய்வாளர், மதுரை கிழக்கு சரகம் என்பவரால் தனி நபர் குற்ற வழக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கண்டுள்ள எதிரி மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(C) r/w விதிகள் 65(3)(1), 65(2), 65(4)(3)(i), 65(9)(a) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)–ன் படி சட்டவிதியை மீறிவிட்டார் என கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரி முன்னிலையாகி வழக்கு ஆவணங்கள் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி தரப்பில் குற்ற ஒப்புதல் மனு அவரது வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த குற்ற ஒப்புதல் மனுவானது இந்நீதிமன்றத்தால் சி.ஆர்.எம்.பி.எண்.1193/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(C) r/w விதிகள் 65(3)(1), 65(2), 65(4)(3)(i), 65(9)(a) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)–ன் படி பொறுப்பாவார்.

3) வழக்கு ஆவணங்கள் மற்றும் எதிரியின் குற்ற ஒப்புதல் மனுவை கவனமுடன் பரிசீலனை செய்து எதிரி மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 பிரிவு **18(C) r/w விதிகள் 65(3)(1) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)**–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரி மேற்படி குற்றத்திற்கு நீதிமன்றம் கலையும் வரை தண்டனை விதித்தும், எதிரிக்கு அபராதம் **ரூ.20,000/–ம்** விதித்தும்,

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.17 15:15:20 +0530

கட்டத்தவறினால் இரண்டு மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேலும் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 **பிரிவு 18(C) r/w விதிகள் 65(2) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)**–ன் படி கீழான குற்றத்திற்கு எதிரி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு நீதிமன்றம் கலையும் வரை தண்டனை விதித்தும், எதிரிக்கு அபராதம் **ரூ.20,000/–ம்** விதித்தும், கட்டத்தவறினால் இரண்டு மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேலும் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 **பிரிவு 18(C) r/w விதிகள் 65(4)(3)(i) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)**–ன் படி கீழான குற்றத்திற்கு எதிரி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு நீதிமன்றம் கலையும் வரை தண்டனை விதித்தும், எதிரிக்கு அபராதம் **ரூ.20,000/–**ம் விதித்தும், கட்டத்தவறினால் இரண்டு மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேலும் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 பிரிவு **18(C) r/w விதிகள் 65(9)(a) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் r/w தண்டனைப்பிரிவு 27(d)**–ன் படி கீழான குற்றத்திற்கு எதிரி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு நீதிமன்றம் கலையும் வரை தண்டனை விதித்தும், எதிரிக்கு அபராதம் **ரூ.20,000/–**ம் விதித்தும், கட்டத்தவறினால் இரண்டு மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் உத்தரவிடப்படுகிறது. **(மொத்த அபராதம் ரூ.80,000/– (ரூபாய் என்பதாயிரம் மட்டும்)**

4) இவ்வழக்கின் தண்டனை விவரத்தை மருந்துகள் மற்றும் அழகு சாதனப்பொருட்கள் சட்டம் பிரிவு 35–ன் கீழ், எதிரியின் செலவிலேயே ஏதாவது ஒரு தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து, தினசரி நாளிதழை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.17 15:15:25 +0530

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 17.08.2026–ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.17 15:15:29 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

**<u>பின் இணைப்பு:–</u>**

அரசு தரப்பில் சாட்சிகள் :– இல்லை
எதிரி தரப்பில் சாட்சிகள்:– இல்லை
இவ்வுத்தரவு குற்றமுறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.17 15:15:32 +0530